# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2343/11 - 2023 අගෝස්තු මස 01 වැනි අඟහරුවාදා - 2023.08.01

*2343/11 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

பிரிவு 2 மற்றும் 5 இன் கீழான கட்டளை

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இந்தக் கட்டளை மூலம், இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பண்டம் தொடர்பாக அதற்கு நேரொத்த பதிவிலே அவ்வட்டவணையின் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை விதிக்கின்றேன்.

**அட்டவணை**

| | நிரல் I | | | நிரல் II |
|---|---|---|---|---|
| | பண்டம் உருப்படி | | | |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | விசேட வியாபார பண்ட அறவீடு |
| 1. | 03.05 | 0305.54.10 | நெத்தலிகள் | கி. கி. ஒன்றுக்கு ரூபா 100 |
| 2. | | 0305.52.00<br>0305.53.00<br>0305.54.90<br>0305.59.30<br>0305.59.90 | உலர் மீன்கள் | கி. கி. ஒன்றுக்கு ரூபா 100 |


1A - PG 6422 — 431 (2023/08)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| பண்டம் உருப்படி | | | | |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | விசேட வியாபார பண்ட அறவீடு |
| 3. | 09.10 | 0910.99.10 | வெந்தயம் (மெத் வித்து) | கி. கி. ஒன்றுக்கு 50 ரூபா |
| 4. | 11.02 | 1102.90.20 | குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) மாவு | கி. கி. ஒன்றுக்கு 150 ரூபா |
| 5. | 12.07 | 1207.50 | கடுகு விதைகள் | கி. கி. ஒன்றுக்கு 62 ரூபா |
| 6. | 25.01 | 2501.00 | உப்பும் (மேசை உப்பும், இயல்பிழந்த உப்பு உட்பட) தூய சோடியம் குளோரைட்டும், திரவக் கரைசலாக அல்லது சேர்க்கப்பட்ட தடிப்படைவதை எதிர்க்கும் காரணிகள் அல்லது இலகுவாகப் பாய்வதை ஊக்குவிக்கும் காரணிகள், சேர்க்கப்பட்டவை அல்லது இம் மூன்று நிலைகளிலும் இல்லாதது : கடல் நீர் | கி. கி. ஒன்றுக்கு 40 ரூபா |

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக;

(அ) வர்த்தக நோக்கம் தவிர்ந்த மருந்துகளை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவுசெய்துள்ள எந்தவொரு மருந்துகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களாலும், சுகாதாரம் தொடர்பான விடயத்திற்குரிய அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் இறக்குமதி செய்யப்படும் மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள இ. மு. குறியீடு 2501.00 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள உப்பின் (சோடியம் குளோரைட்டு வீ. பீ. ) மீது பிரயோகிக்கப்படக்கூடிய விசேட வியாபார பண்ட அறவீடான கி. கி. ஒன்றிற்கு 40 ரூபாவில் இருந்து கி. கி. ஒன்றிற்கு 10 ரூபாவினை அறவிட்ட பின்பு, மிகுதித் தொகையினை விலக்களிக்குமாறும்,

(ஆ) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திலிருந்து 2023 ஆம் ஆண்டுக்கான இறக்குமதி அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொண்ட இறக்குமதியாளர்களினால் இறக்குமதி செய்யப்படும், 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதிய 2301/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் இ. மு. தலைப்பு 03.03 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட மீன்களில் கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள இ. மு. குறியீடுகளின் கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள மீன் வகைகளின் மீது பிரயோகிக்கப்படக்கூடிய விசேட வியாபார பண்ட அறவீடான 10% இலிருந்து அல்லது கி. கி. ஒன்றிற்கு 400 ரூபாவில் இருந்து கி. கி. ஒன்றிற்கு 275 ரூபாவினை அறவிட்ட பின்பு மிகுதித் தொகையினை விலக்களிக்குமாறும் இத்தால் கட்டளையிடுகின்றேன்.

**அட்டவணை**

| இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | மீன் வகை |
|---|---|---|
| 03.03 | 0303.49.00<br>0303.59.00<br>0303.89.90 | தலபத் மீன், கொப்பரா மீன் மற்றும் கட்டா மீன் |

3. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம் பிரிவு 2 மற்றும் 5 இன் கீழானவையும் பின்வரும் விசேட வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்டவையுமான கட்டளைகள் 2023, யூலை31 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்றன.

(I) 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய 2292/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

(II) 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 2298/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

(III) இ. மு. குறியீடு 0303.49 மற்றும் 0303.89.90 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள தலபத் மீன், கொப்பரா மீன் மற்றும் கட்டா மீன் ஆகியவற்றின் இறக்குமதி வரிவிலக்கு தொடர்பிலான 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதிய 2337/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

*4. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2023, யூலை மாதம் 31 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் வகையில் பந்தி இல. 1 மற்றும் 2(அ) இன் கட்டளைகள் ஒருவருட காலப்பகுதிக்கும் பந்தி இல. 2 இன் கட்டளையானது மூன்று மாதங்களுக்கும் செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்*
*தேசியக் கொள்கைகள் அமைச்சர்.*

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்*
*தேசியக் கொள்கைகள் அமைச்சர்,*
*கொழும்பு 01,*
*2023, யூலை 31.*

EOG *08 - 0020*